# சீறத்துன்னபி ﷺ

## நாள் 26



## இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: கிந்தா கோத்திரத்தை அணுகுதல்
- பகுதி 2: பனு ஷைபான் கோத்திரத்தை அணுகுதல்
- பகுதி 3: யத்ரிபிலிருந்த கஸ்ரஜ் கோத்திரத்தை அணுகுதல்
- பகுதி 4: கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த ஆறு பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது

## பகுதி 1: கிந்தா கோத்திரத்தை அணுகுதல்

- இஸ்ரா மற்றும் மிஃராஜ் பயணம் பற்றி இதற்கு முன்பு பார்த்தோம். இப்போது நபி (ஸல்) அவர்களின் மிஃராஜ் பயணத்திற்கு பின்பான மக்கா வாழ்க்கையைப் பார்க்கலாம்.



- அபுதாலிப் இறந்த பிறகும், நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் நடந்த தாயிஃப் சம்பவத்திற்குப் பிறகும், நபி (ஸல்) அவர்கள் வேறொரு கோத்திரத்தைச் சேர்ந்த முத்ஈம் இப்னு அதீஈயின் பாதுகாப்பில் மக்காவுக்குத் திரும்பினார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் சொந்த பனு ஹாஷிம் குடும்பத்தினர், அவர்களைக் கைவிட்டது ஒரு சங்கடமான சூழ்நிலையாக அமைந்து விட்டது. மேலும், முத்ஈம் இப்னு அதிஈ தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தை நெருங்கிக் கொண்டிருந்தார். இக்காரணங்களால், விரைவில் மக்காவை விட்டு வெளியேற வேண்டும் என்பதை நபி (ஸல்) உணர்ந்து கொண்டார்கள்.

- ஹஜ் காலத்தில் நபி (ஸல்) அவர்கள் பல கோத்திரங்களை அணுகி, இஸ்லாத்தை அவர்களுக்கு எடுத்துரைப்பார்கள்.

- ஆனால், நபித்துவத்தின் பத்தாம் ஆண்டு முதல், நபி (ஸல்) அவர்கள் பல கோத்திர மக்களுக்கு இஸ்லாத்தை முன்வைத்து, அவர்கள் தனக்கு ஆதரவளிக்க விருப்பமா? என்று கேட்பார்கள். புதிய கோத்திரத்தினர் இஸ்லாத்தை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; மேலும் எந்தவொரு எதிரியிடமிருந்தும் நபி (ஸல்) அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க தயாராக இருக்க வேண்டும் என்பதே அடிப்படையில் இதன் பொருள்.

- நபி (ஸல்) அவர்கள் பல கோத்திரங்களை அணுகி, எவ்வாறு விவாதங்களை நடத்தினார்கள் என்பதைப் புரிந்துகொள்ள அவற்றின் சில நிகழ்வுகளைப் பற்றி விவாதிப்போம்.

- முதலாவது, கிந்தா என்று அழைக்கப்படும் மிகவும் சக்திவாய்ந்த கோத்திரம்.

- அவர்கள் பழங்காலத்தின் புகழ்பெற்ற கோத்திரம் மற்றும் நீண்ட காலத்திற்கு முன்பு அவர்களுக்கு ஒரு சொந்த ராஜ்ஜியம் இருந்தது.

- நபி (ஸல்) அவர்கள் கிந்தாவின் தலைவர்களில் ஒருவரை அணுகி, தனது செய்தியைக் கூறினார்கள். அந்தத் தலைவர் மிகுந்த கவனத்துடன் கேட்டுவிட்டு, நபி (ஸல்) அவர்களை தன்னுடன் வந்து, கிந்தாவின் மற்ற தலைவர்களுக்கும் இந்த செய்தியை விளக்க வேண்டிக்கொண்டார்.

- அவ்வாறே நபி (ஸல்) அவர்கள், கிந்தா தலைவர்களின் கூட்டத்தில் உரையாற்றி, அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துரைத்து, தனக்கு ஆதரவளிக்க சம்மதமா? எனக் கேட்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் பேசி முடித்ததும், நபி (ஸல்) அவர்களை அறிமுகப்படுத்திய தலைவர், ‘‘என் சக கோத்திரத்தார்களே! இந்த விஷயத்தை இந்த இளைஞனிடமிருந்து எடுத்துக் கொண்டு, அவரை ஆதரித்தால், மற்ற அரேபியர்களை வெல்லக்கூடிய ஒரு வாய்ப்பு நமக்குக் கிடைக்கும்’’ என்று கூறினார்.

- பின்னர் அவர் நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி, ‘‘இந்த விஷயத்தில் நாங்கள் உங்களைப் பின்பற்றி, அல்லாஹ்வின் அருளால் உங்கள் எதிரிகள் அனைவரையும் வென்றதன் பின், உங்களுக்குப் பிறகு எங்களுக்கு ஆட்சி விவகாரங்களின் கட்டுப்பாட்டைக் கொடுப்பீர்களா?’’ என்று கேட்டார். அதாவது, உங்களுக்குப் பிறகு எங்களை ஆட்சியாளர்களாக அனுமதிப்பீர்களா?

- இதற்கு, நபி (ஸல்) அவர்கள், ‘‘இந்த பூமி அல்லாஹ்வுக்குச் சொந்தமானது; அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கு ஆட்சியைக் கொடுக்கிறான்’’ என்று பதிலளித்தார்கள்.

- அதற்கு அந்தத் தலைவர், ‘‘நீங்கள் உங்களைப் பின்பற்றும்படி கேட்கிறீர்கள். போரில் எங்கள் இரத்தத்தைச் சிந்தவும், அரபுகளை வெல்ல உங்களுக்கு உதவவும், அதன்பின்பு உங்கள் மக்களே ஆட்சி அதிகாரத்தில் இருப்பார்கள்

என்றும் கூறுகிறீர்கள். இது எங்களுக்கு தேவையில்லை'', எனக் கூறினார்.

- கிந்தா தலைவர்களின் முழு நோக்கமும் அரசியல்தான். அவர்கள் பழைய ராஜ்ஜியத்தை மீட்டெடுக்க விரும்பினர். மேலும் அரேபியர்களை கைப்பற்ற இஸ்லாத்தை ஒரு சாக்காகப் பயன்படுத்த விரும்பினர்.

- நபி (ஸல்) அவர்கள் தஞ்சம் கோரும் ஒரு சங்கடமான சூழ்நிலையில் இருந்தபோதிலும், இந்த மக்களின் நோக்கம் அரசியல் ஆதாயம் மட்டுமே என்றும், இஸ்லாத்தை உண்மையாக ஏற்றுக்கொள்வது அல்ல என்றும் அவர்கள் கண்டார்கள். எனவே அவர்கள் அந்தக் கூட்டத்திலிருந்து வெளியேறினார்கள்.



## பகுதி 2: பனு ஷைபான் கோத்திரத்தை அணுகுதல்

- நபி (ஸல்) அவர்களின் அடுத்த முயற்சி பனு ஷைபான் இப்னு தலபா கோத்திரத்தினரைப் பற்றியது.

- அபூபக்கர் (ரலி) அவர்கள் வம்சாவளியின் அறிவாற்றலுடன் இருந்ததால், நபி (ஸல்) அவர்கள் பொதுவாக அபூபக்கர் (ரலி) அவர்களை அழைத்துக்கொண்டு பல்வேறு கோத்திரங்களுடனான சந்திப்புகளுக்குச் செல்வார்கள்.

- அவர்கள் இந்தக் கோத்திரத்தை அடைந்ததும், அபூபக்கர் (ரலி) நபி (ஸல்) அவர்களிடம், ''பனு ஷைபான்கள் அரேபியர்களில் மிகவும் உன்னதமானவர்கள், புகழ்பெற்றவர்கள் மற்றும் ஞானமுள்ளவர்கள்'' என்று கூறினார்கள்.

- அவர்கள் ஒருவருக்கொருவர் அறிமுகப்படுத்திக் கொள்கிறார்கள்; பனு ஷைபான்கள் அவர்களிடம் என்ன விஷயம்? என்று கேட்கிறார்கள்.

- நபி (ஸல்) அவர்கள், ''நாங்கள் ஒரே அல்லாஹ்வை வணங்க உங்களை அழைக்க இங்கு வந்துள்ளோம். மேலும், குரைஷிகள் எங்களிடம் ஆணவம் கொண்டு, அல்லாஹ்வின் செய்தியைப் பரப்ப தடுப்பதால், எங்களை உங்கள் கோத்திரத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம். அல்லாஹ், அல்கானி (தன்னிறைவு பெற்றவன்) மற்றும் அல்ஹமீத் (புகழ்பெற்றவன்) ஆவான்.

- ''சொல்வதற்கு வேறு ஏதாவது இருக்கிறதா?'' என்று பனு ஷைபான்கள் கேட்டார்கள்; அதற்கு நபி (ஸல்) அவர்கள் நெறிமுறைகள் மற்றும் ஒழுக்க நடத்தை பற்றிப் பேசும் குர்ஆனின் வசனங்களான ஸூரா அல்அன்ஆம் (6:151) வசனத்தை ஓதினார்கள்.

- குர்ஆனின் வசனங்களைக் கேட்ட தலைவர்கள், ''நீங்கள் உண்மையில் நன்மையுடன் வந்திருக்கிறீர்கள். மேலும் நீங்கள் எங்களை சிறந்த ஒழுக்கத்திற்கு அழைத்திருக்கிறீர்கள். குரைஷிகள் உங்களுக்கு எதிராகப் பொய் சொல்லியிருக்கிறார்கள்'' என்று கூறினார்கள்.

- பின்னர் பனு ஷைபான்களின் தலைவர் எழுந்து நின்று, ''குரைஷியர்களே! முதல் சந்திப்பிற்குப் பிறகு நாங்கள் எங்கள் மதத்தையும், எங்கள் வழிமுறைகளையும் விட்டுவிட்டு உங்கள் வழிகளைத் தழுவினால், அது அவசரமான முடிவு என்று நான் நினைக்கிறேன்.

- மேலும் சில தலைவர்கள் எங்களுக்கு உள்ளனர். அவர்களின் ஆலோசனையை நாங்கள் கேட்க வேண்டும். அவர்களின் ஆதரவு அவசியம். எனவே நாம் காத்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அடுத்த ஆண்டு நாங்கள் ஒரு முடிவுடன் திரும்பி வருவோம்''.

- பின்னர் அவர் தனது இராணுவத் தலைவரிடம் திரும்பி, அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்று கேட்டார்.

- இராணுவத் தலைவர், ‘‘நீங்கள் சொன்னது உண்மை, இந்த விஷயத்தில் நாம் அவசரப்படக்கூடாது. இன்னொரு விஷயமும் இருக்கிறது.

- நாம் அண்டை அரேபியர்களுடனும், கிஸ்ராவுடனும் (பாரசீகப் பேரரசின் ஒரு பகுதி மரியாதையும், ஒப்பந்தங்களையும் கொண்ட அரேபிய மக்களாக இருக்கிறோம்.

- அண்டை அரேபியர்களைப் பொறுத்தவரை, நாங்கள் அவர்களை சமாளித்து விடலாம்.

- இருப்பினும், கிஸ்ராவைப் பொறுத்தவரை, நாங்கள் நடுநிலையாக இருக்க அவர்களுடன் எங்களுக்கு ஒரு ஒப்பந்தம் உள்ளது. உங்களுடைய இந்த கருத்து பாரசீக மன்னர்கள் ஏற்றுக்கொள்ளும் விஷயமல்ல.



- எனவே நாங்கள் உங்களை ஏற்றுக்கொண்டால், அது அரேபியர்களுடனான உறவுகளைப் பற்றியது மட்டுமே ஆகும், பாரசீகர்களுடனான உறவுகளைப் பற்றியது அல்ல.

- நபி (ஸல்) அவர்கள், ‘‘உங்கள் பதில் நன்றாகவும், நேர்மையாகவும் இருக்கிறது. ஆனால் அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவ, அதை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்களால் மட்டுமே முடியும்’’ என்று கூறினார்கள். அல்லாஹ் குர்ஆனில் கூறுவது: ‘‘நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் இஸ்லாத்தில் முழுமையாக நுழைந்து விடுங்கள்....’’ – (ஸூரா அல்பகரா: 2:208)

- நபி (ஸல்) அவர்கள் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் புறப்பட எழுந்து நின்றார்கள். அவர்கள் புறப்படும்போது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘கிஸ்ராவின் ஒரு விஷயத்தைப் பற்றி நான் உங்களிடம் சொல்லவேண்டும்; அல்லாஹ் உங்களுக்கு கிஸ்ராவின் ராஜ்ஜியத்தின் மீது வெற்றியைத் தருவான்.

- நீங்கள் அவர்களின் செல்வத்தையும், கட்டிடங்களையும் அவர்களின் உடைமைகளையும் அனுபவிப்பீர்கள். அந்நேரத்தில் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?’’ என்று கேட்டார்கள்.

- அவர்களில் ஒருவர், ‘ஆம்’ என்று கூறினார். ஆனால் ஒட்டுமொத்தக் குழுவும் இது நடக்கும் என்று நம்பவில்லை.

- உண்மையில் இதுதான் நடந்தது, முஸ்லிம்கள் மதீனாவில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டவுடன், சில ஆண்டுகளுக்குள், முஸ்லிம்கள் கிஸ்ராவின் அரண்மனைகளைக் கைப்பற்றினர்.

## பகுதி 3: யத்ரிபிலிருந்த கஸ்ரஜ் கோத்திரத்தை அணுகுதல்



- நபி (ஸல்) அவர்கள் நடத்திய மற்றொரு சந்திப்பு, யத்ரிப் நகரத்தைச் சேர்ந்த (பின்னர் மதீனா என்று அழைக்கப்பட்டது) ஒரு சிறிய குழுவினருடன் அகபா என்ற இடத்தில் (ஜம்ரத் அதாவது கல்லெறியும் பகுதியுள்ள இடம்) நடந்தது.

- நபி (ஸல்) அக்குழுவை அணுகினார்கள். அப்போது அவர்கள் தனியாக இருந்தார்கள்.

- நபி (ஸல்) அக்குழுவைப் பற்றி விசாரித்தார்கள். அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னார்கள்.

- அதற்கு நபி (ஸல்), ‘‘யத்ரிபில் யூதர்களுக்கு அருகிலிருக்கும் கஸ்ரஜ் கோத்திரத்தார்களா நீங்கள்?’’ என்று கேட்டார்கள்.

- அவர்கள் அதை உறுதிப்படுத்தினர். பின்னர், நபி (ஸல்) அவர்களுடன் பேச அனுமதி கேட்டார்கள்.

- இதன் விவரங்களுக்குள் செல்வதற்கு முன், யத்ரிப் மக்களைப் பற்றிய ஒரு சிறிய பின்னணியைப் புரிந்துகொள்வது அவசியம்.

- யத்ரிப் நகரம் மூன்று முக்கிய குழுக்களைக் கொண்டிருந்தது. அவர்களில் இருவர் அரேபியர்கள், மற்றொரு குழு யூதர்கள்.

- அரபு பழங்குடியினர் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ். பிரபலமான யூத பழங்குடியினர் பனூ நதீர், பனூ கைனுகா மற்றும் பனூ குரைளா.

- யத்ரிபில் பல விஷயங்கள் நடந்திருந்ததால், அங்கு ஒரு புதிய மதத்தை ஏற்றுக்கொள்ளவும், நபி (ஸல்) அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொள்ளவும் அந்த இடம் பக்குவப்பட்டிருந்தது.

- இவற்றில் மிக முக்கியமானது பத்தாண்டுகள் நீடித்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் இடையேயான உள்நாட்டுப் போர்களின் உச்சக்கட்டமாக அமைந்த புஆஸ் போர்.



- நபி (ஸல்) அவர்களுடன் கஸ்ரஜ் மக்களின் முதன் சந்திப்பிற்கு சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு புஆஸ் போர் நடந்தது.

- ஆயிஷா (ரலி) அவர்கள் ஸஹீஹ் புகாரீயில் ஒரு அறிவிப்பில் கூறுகிறார்கள்: ‘‘புஆஸ் நாள் அல்லாஹ் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கிய ஒரு பரிசு.

- புஆஸ் காரணமாகவே அவர்களின் ஒற்றுமை முற்றிலுமாகத் துண்டு துண்டாக உடைந்து, அவர்களின் தலைவர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டனர்.

- புஆஸ் போர் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜின் மூத்த உறுப்பினர்களில் பெரும்பாலோரைக் கொன்றது.

- அவர்களில் எஞ்சியிருந்தவர்கள் இளைய தலைமுறையினர். அவர்கள் 10 ஆண்டுகள் இரத்தத்தையும், போரையுமே கண்டவர்கள்.

- அவர்கள் இளமையாக இருந்தார்கள்; புதிதாக ஒன்றைத் தேடிக்கொண்டிருந்தார்கள். தங்கள் வாழ்க்கையில் புதிய அர்த்தத்தை விரும்பினார்கள்’’.

## பகுதி 4: கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த ஆறு பேர் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது

- யத்ரிப் பூமி புதிய செய்தியை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்ததற்கு மற்றொரு காரணம், அவர்கள் மட்டுமே ஏகத்துவ மதத்தைப் பற்றிய அறிவைக் கொண்ட அரேபியர்களின் குழுவாக இருந்தனர்.

- அவர்கள் யூதர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். எனவே அவர்கள் நபிமார்கள் மற்றும் வேதங்கள், வேதங்களிலிருந்து வரும் சட்டங்கள் மற்றும் நெறிமுறைகளைப் பற்றி அறிந்திருந்தனர்.

- யூதர்கள் தங்கள் அல்லாஹ்விடமிருந்து வேதங்கள் மற்றும் சட்டங்களைப் பெற்றிருப்பதாகக் கூறுவார்கள். மேலும் யூதர்கள், அரேபியர்களை விட சிறந்தவர்கள் என்று அவர்கள் சொல்வதை ஒரு குறிக்கோளாகக் கொண்டிருந்தார்கள்.

- இதனால் அரபு குலத்தைச் சேர்ந்த அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் மக்கள் எப்போதும் யூதர்களை விட தாழ்ந்தவர்களாக உணர்ந்தனர்.

- இப்போது ஒரு புதிய மதம், ஒரு புதிய நபி மற்றும் புதிய வேதத்தைத் தழுவுவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட்டதால், அவர்கள் அதைப் பரிசீலிக்கத் தயாராக இருந்தனர்.

- மேலும், போர்களின் மூலம் அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் மக்கள் முற்றிலுமாக அழித்துவிடும் காலம் விரைவில் வரும் என்று யூதர்கள் கூறிக்கொண்டே இருந்தனர்..

- ஏனென்றால் யூதர்கள் தங்களுக்கு வரவிருக்கும் ஒரு நபிக்காகக் காத்திருந்தனர். அவர் வந்தவுடன், அரேபியர்களின் காலம் எல்லாம் முடிந்துவிடும் என் எண்ணினர்.

- ஆனால், அவர்கள் எதிர்பார்த்த நபி, அரேபியர்களிடையே இருந்து வந்ததைக் கண்டதும், அவர்கள் அந்தச் செய்தியை நிராகரித்தனர்.

- குர்ஆன் ஸூரா அல்பகரா (2:89) வசனத்தில் இதைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ''அவர்கள் நன்கு அறிந்த ஒன்று அவர்களுக்கு வந்தபோது, அவர்கள் அதை அறிந்தே நிராகரித்தனர்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

- மேலும் குர்ஆன் கூறுகிறது: ''தன் அடியார்களில் (முஹம்மது) தான் நாடியவர் மீது (ஒரு இஸ்ரவேலருக்கு அல்லாமல்) தன் அருட்கொடையை அல்லாஹ் அருளியதற்காக பொறாமைப்பட்டு, அல்லாஹ் அருளியதையே நிராகரித்து தங்கள் ஆத்மாக்களை விற்று, அவர்கள் பெற்றுக்கொண்டது மிகவும் கெட்டதாகும். இதனால் அவர்கள் (இறைவனுடைய) கோபத்திற்கு மேல் கோபத்திற்கு ஆளாகிவிட்டார்கள். – ஸூரா அல்பகரா (2:90)

- அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் மக்கள் புதிய மதமான இஸ்லாத்தைத் தழுவுவதற்கான வாய்ப்பைப் பெற்றனர். மேலும் இது உண்மையாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் தங்கள் இதயங்களில் அறிந்திருந்தனர்.

- அகபாவில் நடந்த கூட்டத்திற்கு வந்த நபி (ஸல்) அவர்கள், கஸ்ரஜ் மக்களுடன் அமர்ந்து, மற்ற முக்கிய கோத்திரங்களுடன் அவர்கள் மேற்கொண்ட அதே ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் இஸ்லாத்தின் போதனைகளை அவர்களுக்கு விளக்கினார்கள்.

- கஸ்ரஜ் மக்கள் வெறும் ஆறு பேர் மட்டுமே இருந்தனர். அவர்களுக்கு தங்க ஒரு கூடாரம் கூட இல்லை.

- நபி (ஸல்) அவர்கள் இந்த ஆறு பேருக்கும் இஸ்லாத்தை போதனை செய்தார்கள். உடனே இந்த ஆறு பேரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இவ்வாறாக நபி (ஸல்) அவர்கள் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும் வெற்றியை ஏற்படுத்தினார்கள். அடுத்த ஆண்டு மீண்டும் வருவதாக இந்த மக்கள் உறுதிமொழி செய்தனர்.

- இந்த மக்கள் வீடு திரும்பியதும், இஸ்லாத்தின் செய்தியைப் பரப்பத் தொடங்கினர்.